www.padippakam.com

# திரிபுவாதப் பாரம்பரியத்தையும் முதலாளித்துவ தேசியவாதத்தையும் தூக்கியெறியுங்கள் !

## தமிழ்த் தேசப் பொதுவுடமைக்கட்சி அணிகளுக்கு ஓர் அறைகூவல்.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

புதிய ஜனநாயக வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

தொடர்பு முகவரி:--

"SAMAR"
87 , RUE DE COLOMBES
92600 - ASNIERES SUR SEINE
FRANCE.

பணம் அனுப்பவேண்டிய தபாற்கணக்கு

2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சி அணிகளுக்கு ஓர் வேண்டுகோள்!

அன்பார்ந்த தோழர்களே!

உண்மைகள் முகத்தில் அறையும் நேரமிது. இப்பொழுது கண்களை மூடினாலும் உண்மைகள் விடுவதில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலை நிறுத்தப் பட்ட நாடான ரசியா, சமூக ஏகாதிபத்தியமாக சீரழிந்து விட்டது என புரட்சியாளர்கள் அன்றே கூறினார்கள்; ஆனால், அவர்கள் எள்ளி நகையாடப்பட்டார்கள்; அமெரிக்க உளவாளிகள் என்று அவதூறு செய்யப் பட்டார்கள்; யாரால்? மார்க்சியத்தை மறந்தவர்களால்; திருத்தல்வாத சித்தாந்தத்தால் ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாகிப் போனவர்களால். இன்று கோர்பசேவ் என்ற ஏமாற்றுக்காரன் சோவியத் ஒன்றியத்தையும் ''கம்யூனிஸ்ட்'' கட்சியையும் கலைத்த பிறகும் கபோதிகளாகவே இவர்களில் இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ரசியா அடிப்படையில் சோசலிச நாடுதான் என இன்றும் முழங்குகிறார்கள். இன்னும் சிலரோ கருவாட்டை மடியில் கட்டிய பாப்பாத்தியைப் போல மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விழிக்கிற நேரமிது!

ஈழத் தமிழர்களின் உரிமையை ஆதரித்துப் போராட எங்களால்தான் முடியும் என்று உரிமை பாராட்டியவர்கள், விடுதலைப் புலிகளை விமர்சனமின்றி ஆதரிக்க வேண்டும் என்று 'ஜம்பம்' அடித்தவர்கள், மாநாடு கூட்டி மார் தட்டியவர்கள், ஈழத் தமிழர்களை ஆதரிப்பவர்கள் மீது

படிப்பகம்

www.padippakam.com



தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும் என பாசிச பார்ப்பன ஜெயலலிதா கும்பல் அறிவித்ததுமே ஏன், ராஜீவ்காந்தி பழி தீர்க்கப்பட்டதிலிருந்தே வாய் மூடி மௌனியாகி விட்டார்கள். தெரிந்தே புளிய மரத்தில் மோதிக் கொள்வதா வீரம்? என தம்மை நியாயப்படுத்தி கொள்கிறார்கள். இவர்களையும் மீறி ஈழத்தை ஆதரிக்கும் தமது கட்சிக் காரர்களையே காட்டிக் கொடுக்கவும் தயாராகி உள்ளார்கள் என்பதை அனைவரும் உணரும் நேரமிது. நாத் தழும்பேற நாத்திகம் பேசி, பார்ப்பனியத்தை பாடைக்கு அனுப்ப வந்த அவதார 'புருஷர்கள்' ''தன்மானத்தை இன மானத்திற்குட்படுத்தி'' பார்ப்பன கும்பலோடு 'பஜனை' பாடுகிற நேரமிது!

அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகப் போலீஸ்காரன் பதவியிலிருந்தாலும் சொந்த நாட்டில் கடன் சுமையும், உற்பத்தி மந்தமும் அதிகமாகி பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளுக்கும், அமெரிக்காவின் அந்தரங்க தாசர்களுக்கும் உண்மை முகத்தில் அறைய கையை ஓங்கி இருக்கும் நேரமிது!

ஏகாதிபத்திய மேலாதிக்க கொள்கையும், திருத்தல் வாதமும், மக்களை மயக்கும் சமரசவாதமும் தோற்று, மார்க்சியம் — லெனினியம் வெல்லப்பட முடியாதது என உலகுக்கு அறை கூவல் விடுக்கும் நேரமிது. அந்த அறை கூவலை சிரமேற்கொண்டு புயற் பறவையாய்க் கிளம்பி உலகை மீண்டும் குலுக்க அனைத்தையும் இன்முகத்துடன் ஏற்று உழைப்பவர் உலகாள பிறந்தவர் என உரைக்க வேண்டிய நேரமிது!

ஆமாம் தோழர்களே!

மார்க்சியம் - லெனினியம் வெல்லப்பட முடியாத தத்துவம் என்பதை நாம் அறிவோம். ஆனால் பல போலி வைத்தியர்கள் அதனை மண்ணுக்கேற்ப தாம் பிரயோகிப்ப

படிப்பகம்

www.padippakam.com



தாகக் கூறி நடைமுறையில் ஆளும் வர்க்கத்திற்கு பாத 'பூஜை' செய்து, மார்க்சிய-லெனினியத்தை மாசுபடுத்து கிறார்கள். இந்த போலி வைத்தியர்கள்தான், பாட்டாளி வர்க்கத்திற்கு துரோகம் செய்து, அவர்களின் முதுகில் குத்தியவர்கள். உழைக்கும் மக்களை வஞ்சித்தவர்கள் இந்த போலி கம்யூனிஸ்டுகள்.

சி.பி.ஐ.லிருந்து சித்தாந்த போராட்டமின்றி இந்திய-சீன விவகாரத்தால் வெளியேற்றப்பட்டு வெளியேறி தனி, கட்சி அமைத்த சி.பி.எம், 'சி.பி.ஐ. கட்சி திரிபுவாதக் கட்சி, தானே புரட்சிகர கட்சி' என கூறிக் கொண்டு தோன்றியது. பின்னர் 1976 அவசர நிலைக்கு பிறகு கொள்கையை சி.பி.எம். தலைமையினர் கை விட்டு விட்டார்கள் என வீராப்புப் பேசி, 1985ல் முற்றிலும் வேறுபட்டு, மண்ணுக் கேற்றவாறு மார்க்சியத்தை பிரயோகிக்கிறோம் என்ற அடிப்படையில் 1991ல் த.தே.பொ.க. அமைக்கப்பட்டது. அதிலுள்ள உங்கள் எல்லோருக்கும் மார்க்சிஸ்டு - லெனினிஸ்டு கட்சியைச் சேர்ந்த [நக்சல்பாரி கட்சியைச் சார்ந்த] நாங்கள் பின்வரும் பணிவான வேண்டுகோளை விடுக்கிறோம்.

கம்யூனிஸ்ட் அணியில் இருப்பதாக கருதும் நீங்கள், இடையறாது, மார்க்சியத்திற்கும் திரிபுவாதத்திற்கும் உள்ள எல்லைக் கோட்டை அரசியல், அமைப்பு துறைகள் இரண்டிலும் பரிசீலிக்க வேண்டும். சித்தாந்தம் — நடைமுறை இரண்டிலும் புரட்சிகரப் பாரம்பரியத்தை நிலை நாட்டிட வேண்டும். இதில் தயக்கமோ, தனிநபர் வழிபாடோ பரிசோதனையில்லாமல் மானசீகமாக நினைத்துக் கொள்ளும் அணுகுமுறையோ கூடாது. குழப்பங்களால் மனங் கலங்க வேண்டியதில்லை. தெளிவை நோக்கிய பயணத்திற்குத்தான் முயல வேண்டும். புரட்சிப்பயணத்தை கைவிடக்கூடாது. சித்தாந்தத் துறையில் தெளிவடைவது நடைமுறையின் குருட்டுத்தனமான பிழைகளைத் தவிர்க்கும். புரட்சிகர நடைமுறையில் ஊன்றி நிற்கும்

படிப்பகம்

www.padippakam.com



பண்பு புரட்சிகர அரசியல் மீதான நம்பிக்கையைப் பிறரி டமும் தோற்றுவித்து அமைப்பை விரிவடையச் செய்யும். புரட்சியின் பயணத்தில் இவை அத்தியாவசியமானவை.

1985 வரை சி.பி.எம். அணி வரிசையில் இருந்தபோதும். எம்.சி.பி.ஐ. என அமைத்திருந்த போதும் [85 முதல் 90 முடிய] த.தே.பொ.க. தொடங்கிய போதும் [1991 முதல்] திரு. பெ. மணியரசன் (பெ.ம.) புரட்சிகரமான சரியான மார்க்சிய — லெனினியத்திலிருந்து விலகியே நின்றுள்ளார். மேன்மேலும் அதன் எதிர் திசைக்கு சென்றுள்ளார். அவரும் அவரது கட்சியும் எங்கிருந்து தொடங்கி இன்று எங்கு நிற்கிறார்கள் என த. தே. பொ. க. அணிகள் உணர வேண்டும் என்ற நோக்கிலேயே இப்பிரசுரம் முன் வைக்கப் படுகிறது. பிற பிரிவுகளின் அணிகளுக்கும் பரிசீலனைக்கு இது பெரிதும் உதவும் என கருதுகிறோம்.

மார்க்சிய — லெனினிய அமைப்பின் (நக்சல்பாரி அமைப்பின்) சரியான நிலைப்பாடுகளிலிருந்து, பெ.ம. இருந்தசி.பி.எம், எம்.சி.பி.ஐ, தற்பொழுது இருக்கும் த.தே. பொ. க. அமைப்புகளின் நிலைப்பாடுகள் வேறுபட்டவை என்பதை நினைவில் கொண்டு இப்பரிசீலனையை தொடங்க வேண்டுகிறோம். அதே சமயம் எப்பொழுதும் த. தே. பொ. க. தலைமை, மா. லெ. இயக்கத்தையும் அமைப்புக்ளையும் தீவிரவாத அமைப்பாகவும் இன்னும் மோசமாகவும் சித்தரித்து வந்துள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டுகிறோம்.

*அன்று — 'சி.பி.எம்-மின் எதிரி சி.பி.எம். கட்சியே"*
*இன்று — பெ.ம.வின் எதிரி பெ. ம. வே!*

**எமது முதலாவது கேள்வி :**

1976 அவசர நிலைக்குப் பின் சி.பி.எம். கைவிட்டதாக கூறி, தான் பின்பற்றுவதாக கூறிக் கொண்ட கொள்கை

படிப்பகம்

www.padippakam.com



களை தொடர்ந்து பெ.ம. இன்னமும் பற்றி நிற்கிறரா? தற்போதைய நிலைப்பாடுகளுக்கும் அவற்றுக்கும் உள்ள உறவைப் பற்றி பொதுவுடமைவாதி என்ற முறையில் விளக்கம் அளித்தாரா?

**இல்லை**

'சி.பி.எம்.மின் எதிரி சி,பி.எம். கட்சியே' என்ற தனது நூலில் பெ.ம., சி.பி.எம். கட்சி கல்கத்தா மாநாட்டில் வரையறுத்த கட்சித் திட்டமும், ஒன்றாய் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி 1951ல் உருவாக்கிய நடைமுறைத் திட்டத்தை 1968ல் கொள்கை அறிக்கையாக சில மாற்றங்களுடன் வெளியிடப்பட்டதும் முற்றிலும் சரியானவை என்றார். இவற்றிற்கு அரண் செய்வதாக சி.பி.எம். வெளியிட்ட 'விவசாய அரங்கில் நமது பணி', 'தொழிற்சங்க அரங்கில் நமது பணி', 'கட்சி ஸ்தாபன அமைப்பு - நம் கடமை' 'புதிய நிலைமையும் கட்சியின் கடமைகளும்' 'தத்துவப் பிரச்சனைகள் குறித்தும்' ஆகிய ஐந்து ஆவணங்களை குறிப்பிட்டார். 'சி.பி.எம்-ன் எதிரி சி.பி.எம். கட்சியே' என்ற நூலில் பெ. ம,. சி.பி.எம் பற்றி வைத்த விமர்சனங்களை இப்போதும் பற்றி ஒழுகுகிறாரா என்று பரிசீலிப்போம்.

(i) (1964 முதல் 1976 வரை) விவசாயப் புரட்சி பற்றி தற்போதைய தலைமை,தான் ஏற்றுக் கொண்ட உண்மைகளாகத் தொகுத்தவை பின்வருமாறு:

'மக்கள் ஜனநாயகப் புரட்சிதான் இன்றைய புரட்சியின் கட்டம். விவசாயப் புரட்சிதான் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் உயிர். மக்கள் ஜனநாயக முன்னணிக்கு தொழிலாளர் — விவசாயிகள் கூட்டணியே அச்சு. அடித்தள விவசாயிகளே விவசாய இயக்கத்தின் ஆதார சக்தி. அவர்கள் கோரிக்கைகளை முன் வைத்துத்தான் ,உழைக்கும் விவசாயிகளை ஸ்தாபனமாக வலுப்படுத்த முடியும். உழைக்கும் விவசயிகளின் வலிமையைப் பொறுத்தே இதர

படிப்பகம்

www.padippakam.com



விவசாயிகளை இயக்கத்துக்குள் ஈர்ப்பதும் சகல விவசாயி களின் ஒற்றுமையை உருவாக்குவதும் சாத்தியம். உழைக்கும் விவசாயிகளின் கோரிக்கைகளை இரண்டாம் பட்சமாக்குவது, நடைமுறையில் பணக்கார விவசாயிகளின் பாது காப்பில் விவசாய இயக்கத்தை ஒப்படைப்பதாகும். வலது சாரி பாதைக்கு திரும்பிவிட்ட ஒரு கம்யூனிஸ்ட் கட்சி, விவசாயப் புரட்சி பற்றி கனவு கூட காணமுடியாது." இவை அனைத்தும் சி.பி.எம். ஏற்றுக் கொண்ட ஒன்பது உண்மைகள் என்றும், மேற்கண்டவற்றில் கடைசி நான்கை காலில் போட்டு மிதித்து விட்ட சி.பி.எம். முதல் நான்கு உண்மைகளின் உயிரைப் பறித்துவிட்டது. கட்சித் திட்டத்தை மியூசியத்தின் காட்சிப் பொருளாக்கிவிட்டது. என்றும் 'சி.பி.எம். கட்சி எப்படி சி.பி.எம். எதிரியாகி விட்டது. என்றும் பெ.ம. வாதிட்டிருந்தார்.

(ii) பகுதிப் புரட்சிபற்றி

**பார்க்க:** 1985 இல் அன்றைய எம்.சி.பி.ஐ. தமிழ்நாடு அமைப்புக் குழு மேற்கோள் காட்டியுள்ளது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] எந்த பாதையில் செல்கிறது? புரட்சிகர பாதையா? திருத்தல் வாதப் பாதையா? என்று 1985 ஜூனில் மா.க.க. தமிழ்நாடு அமைப்புக்குழு வெளியிட்ட அறிக்கை) ''இந்தியாவையும் சீனாவையும் ஒப்பிட்டு, இந்தியாவில் விவசாய இயக்கம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான வீச்சில் வளர முடியாது'' என்றும் ''(விவசாய) நெருக்கடியின் முதிர்ச் சியை பொருத்தும் விவசாய பெருங்குடி மக்களின் ஒற்று மையின் அளவை பொருத்தும் அவர்களுடைய மனோ பாவத்தையும் பலத்தையும் கட்சியின் செல்வாக்கையும் மற்ற அம்சங்களையும் பொருத்தும் வெவ்வேறு முறையி லான ஸ்தாபன அம்சங்களையும் பொருத்தும் வெவ்வேறு முறையிலான ஸ்தாபன போராட்ட முறைகளை நாம் கடைபிடிக்க வேண்டும்'' என்றும் 1987 கொள்கை அறிக்கை குறிப்பிடுவதாக பகுதிப் புரட்சியை வலியுறுத்தினர்.

www.padippakam.com



## (iii) "இடதுசாரி ஜனநாயக முன்னணி" பற்றி...

'உழைக்கும் வர்க்க கட்சிகளின் தலைமையில் தான் இடது ஜனநாயகத் திட்டம் நிறைவேற முடியும்', இடதுசாரி ஜனநாயகத் திட்டத்தில் [ஜலந்தர், விஜயவாடாவில் வெளியிடப்பட்டது]ஏகபோகபெரு முதலாளித்துவஎதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஆகிய மூன்று கடமைகளும் முக்கிய் பங்காற்றுகின்றன. இடதுசாரிகள் தலைமை தாங்கும் ஜனநாயக முன்னணி தான் மேற்கொண்ட கடமைகளை நிறைவேற்றும்; 'கட்சி அமைக்கும் இடைக்கால அணியோ அல்லது கடைக்கால அணியோ எதுவாயினும் புரட்சிகர இயக்கத்தின் பாதை நெடுகிலும் இடதுசாரி சக்திகளின் மேலாதிக்கம் தேவையென 1967 இல் சி.பி-எம். ஏற்றியிருந்தது என்று 'சி.பி-எம். எதிரி சி.பி.எம். கட்சியே' என்ற நூலில் பெ ம. குறிப்பிட்டார். சி.பி.எம் இக்கொள்கைகளை கைவிட்டதாக சாடினார்.

அன்பார்ந்த தோழர்களே!

இப்போது சிந்தியுங்கள்! மேற்கண்ட வாதங்களையும் நிலைப்பாடுகளையும் பெ.ம. இன்றும் பற்றி நிற்கிறாரா? மாற்றிக் கொண்டிருந்தால் அது பற்றி விளக்கம் அளித்துள்ளாரா? தற்போதைய நிலைப்பாடுகளை வலியுறுத்தும் போது தனது பழைய நிலைப்பாடுக்கும் இவற்றுக்கும் உள்ள உறவை குறிப்பிடுகிறாரா?

இல்லை, இல்லவே இல்லை. சந்தர்ப்பவாதமாக மழுப்புவது, சொல் அலங்காரங்களில் விளையாடும் பம்மாத்துக்களையும் தான் நீங்கள் காண்பீர்கள்.

1951 நடைமுறைத் திட்டம், 1964 சி.பி.எம். கட்சித் திட்டம், 1968 கொள்கை அறிக்கை — இவற்றின் படியான மக்கள் ஜனநாயகப் புரட்சி, பகுதிப் புரட்சியை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் புரட்சி ஆகிய அனைத்துமே அகில இந்திய அளவிலான கட்சி, அகில இந்திய ரீதியான

www.padippakam.com



புரட்சி என்ற அடிப்படையில் வரையறுக்கப்பட்டவை. அவற்றுக்கும் தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை, தமிழகத்தில் தனிகட்சி, ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் ஒரு கட்சி என்ற பெ.ம. நிலைப்பாடுகளுக்கும் என்ன உறவு உள்ளது?

'பகுதிப் புரட்சிக்கு தன்னுரிமை கோரிக்கையை முன் வைப்பது தவிர்க்க முடியாதது' என புனாமியா என்பவர் (1985 இல் முசாபர்பூர் மாநாட்டில் கூறியது) சொன்னதற்கு அவரோ, பெ.ம. வோ எங்காவது விளக்கம் அளித்துள்ளனரா? இல்லை. ''பகுதி பகுதியான, திட்டு திட்டான விவசாய இயக்கப் பகுதிகளை தொடர்ச்சியான பிரதேசங்களாக மாற்றி பலம் பொருந்தியதாக ஆக்கி அருகாமையிலுள்ள கேந்திரமான யந்திர தொழில் பகுதிகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தோடு இணைத்து, தொழிலாளி — விவசாயி நேச உறவை பலப்படுத்த வேண்டும்'' என கொள்கையறிக்கையை மேற்கோளிட்டு இவர்கள் வாதிட்ட பகுதிப் புரட்சி இவர்களது இன்றைய - தன்னுரிமைப் போராட்டத்திற்கு முன்னுரிமை தனித்தனி தேசிய இனங்களை மைய அரசிலிருந்து விடுவிப்பது என்ற நிலைப்பாட்டிற்கு பொருந்துகிறதா பாருங்கள்! சீனப் புரட்சியின் பல பொதுவான அம்சங்களாக கொண்டிருக்கும் என 1951 கொள்கைஅறிக்கை குறிப்பிடுவதை இன்று பெ.ம. ஏற்றுக் கொண்டுள்ளாரா? விவசாயப் புரட்சித் திட்டத்தை சி.பி.எம் திருத்தியதாக பெ.ம. செய்த சண்டமாருதங்களுக்கு இனியும் ஏதேனும் பொருள் உள்ளதா? இல்லை.

1991 மே ஜூனில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் த.தே.பொ.க கடைபிடித்த 'இடதுசாரி ஜனநாயக முன்னணி கொள்கை என்ன? தான் முன்பு வரையறுத்த வரையறுப்புகளை பற்றி நின்று மூன்றாவது அணி அமைத்தாரா? த.தே.பொ.க. கலந்து கொண்ட மூன்றாவது அணியில் இடது சாரிகளின் மேலாதிக்கம் உள்ளதா என்பது

படிப்பகம்

www.padippakam.com



பற்றி யோசித்தாரா? ஜனதா, லோக்தளம், காங்கிரஸ் கட்சிகளை பெருமுதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ கட்சிகள் என்றும் திமுக, அதிமுக, கேரளா காங்கிரஸ், தெலுங்கு தேசம் ஆகியவை முதலாளித்துவ — நிலப்பிரபுத்துவ கட்சிகள் என்றும் பெ.ம. குறிப்பிட்டார். தமிழர் தேசிய இயக்கத்தை ஒரே கப்பலில் பயணம் செய்யும் சக பயணி என்ற பெ.ம. அதன் வர்க்கத் தன்மையை குறிப்பிட்டாரா? சாதியவாதக் கட்சியான பாட்டாளி மக்கள் கட்சியைப் பற்றிய பெ.ம.வின் வரையறை என்ன? இந்தியக் குடியரசு கட்சி, (பிரகாஷ் அம்பேத்கார் பிரிவு) இந்திய யூனியன், முஸ்லீம் லீக் (AKA சமது பிரிவு), ஜிகாத் கமிட்டி ஆகியன சாதி, மதவாத கட்சிகள் அல்லவா? இவற்றைப் பற்றி பெ. ம. வரையறை என்ன? தனது 1985 வாதத்தை அடியோடு நிராகரித்து விட்டு, குறிப்பிட்ட செயல் திட்டத்திற்கான கூட்டு. இயக்கம் என்று பெ.ம.வின் வருணனையும் ''இவை திடீர் கண்டு பிடிப்புகளுமல்ல, தேர்தல் காலத்து சேர்க்கையும் அல்ல' என்ற சுய பாராட்டும் அப்பட்டமான சந்தர்ப்பவாதம் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்,

''ரசியா சமூக ஜனநாயக இயக்கத்திலேயே மிக மோசமான திருத்தல் வாத வடிவம் எது என்றால் மேலாதிக்கம் என்ற கருத்தை நிராகரிப்பதுதான்'' என்ற லெனின் மேற்கோளை கையாண்டார். பெ. மணியரசன். புரட்சிகர இயக்கத்தின் பாதை நெடுகிலும் மேலாதிக்கம் பெறுவது என்பதை கைவிட்டுவிட்டதாக அடிக் கோடிட்டு 1976க்கு பிந்திய சி.பி.எம்.ஐ. சாடினார்.

சி.பி.எம்மின் மிக மோசமான திருத்தல்வாத வடிவத்தை லெனின் மேற்கோளால் குறி வைத்துத் தாக்கினார். இது சரியானதே,

ஆனால் 1991ல், தான் சி.பி.எம். மீது வைத்த விமர்சனங்களையே மறுக்கும் வகையில் வர்க்கக் கண்

www.padippakam.com



ணோட்டமின்றி சாதியவாத, மதவாத அமைப்புகளுடன் இணைந்து மூன்றாவது அணி கட்டினாரே, இதில் மேலாதிக்கம் பெற்றார் என்று கருதுவதற்கு எள்ளத்தனையும் அடிப்படை இருக்கிறதா? சி.பி.எம் பற்றிய பெ.ம.வின் விமர்சனங்கள் வெற்று வேட்டுகள் தானே? சிந்தியுங்கள் தோழர்களே!

சி.பி.எம்.ஐ சில விசயங்களில் விமரிசிப்பதை வைத்து சி.பி.எம்சந்தர்ப்பவாதத்தை கண்டு வெறுப்படைந்தநீங்கள் இவர் சரியாக இருக்கலாமென நம்பினீர்கள். அந்த நம்பிக்கையை மூன்றாவது அணியைக் கட்டும் நடைமுறையில் பெ. ம. தகர்த்தெறிந்து (எனவேதான் நமது அடுத்த கேள்வி) விடுகிறார்.

## பெ.ம.வின் அடிப்படை அரசியல் கோட்பாடுகள் நவீன திரிபுவாத (சி.பி.எம்) பாரம்பரியம் கொண்டவையே!

**எமது இரண்டாவது கேள்வி:**

பொதுவுடைமைவாதி என்ற முறையில் சர்வதேச அரசியல் நிலமைகள், கடமைகள் குறித்தும் இந்திய தேசிய நிலைப்பாடுகள் குறித்தும் த. தே. பொ. க. யின் தலைவரான பெ.மணியரசன் சுயமாக சிந்தித்து சரியான முடிவுகளை எடுத்துள்ளாரா? மார்க்சிய-லெனினியத்தைப் பின்பற்றியுள்ளாரா?

இல்லை. அடிப்படை அரசியல் கோட்பாட்டு முடிவுகளில் பெ.ம. நவீனத் திரிபுவாத கட்சியான சி.பி.எம்மின் நிலைப்பாடுகளையே கொண்டுள்ளார். இப்போது இதை விரிவாகப் பார்ப்போம்.

(i) சர்வதேச அரசியல் நிலைமைகளில் ரசியா பற்றிய கணிப்பு அடிப்படையான ஒரு விசயமாக உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது, சர்வதேச அரசியல் சக்திகளின் அணி சேர்க்கை, சர்வதேச ஐக்கிய முன்னணி கொள்கை, சோசலிச நிர்மானத்தின் பிரச்சனைகள் போன்றவற்றிற்கு இது அவசியமாக விளங்குகிறது. 1956ல் ரஷியாவில் திரிபுவாதிகள் குருச்சேவ் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து சர்வதேசப் பிரச்சினைகள் அனைத்திலும் திரிபுவாதத்திற்கும் மார்க்சிய-லெனினியத்திற்கும் இடையேயான எல்லைக் கோட்டில் புதிய விசயங்கள் முன்னுக்கு வந்தன.

1964ல் சி.பி.எம். கட்சி அமைத்தபோது அவர்கள் குருச்சேவ் கும்பலை திரிபுவாத கும்பல் என்றனர். அதே சமயம் ரசியா சோசலிநாடு தான் என்று கூறினர். மார்க்சிய-லெனினியவாதிகள் சி.பி.எம். கட்சியிலும் பின்னர் வெளியிலும் எழுப்பிய சித்தாந்த பிரச்சனைகளில் சி.பி.எம். சந்தர்ப்பவாதமாக இந்தக் கருத்தையே வலியுறுத்தியது. படிப்படியாக குருச்சேவ் திரிபுவாதக் கும்பல் என்கிற வரையறுப்பையும் கைவிட்டு விட்டது. இந்த சி. பி. எம். நிலைப்பாட்டிலிருந்து பெ.ம., 1991 ரசிய ஆட்சிக் கவிழ்ப்புத் தோல்வி வரை எப்போதும் மாறவேயில்லை. 30 ஆண்டுகளாக திரிபுவாதக் கட்சியின் ஆட்சி சோசலிசத்தை எப்படி பராமரிக்க முடியும் என்ற மார்க்சிஸ்டு-லெனினிஸ்டுகளின் கேள்விக்கு சி.பி.எம் பதலளித்ததா? அதெப்படி சோசலிசத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு திரும்ப முடியும்? வரலாற்றுச் சக்கரத்தை பின்னுக்குத் தள்ள முடியுமா? இது வரலாற்றுப் பொருள் முதல் வாதத்திற்கு முரணானது என்றனர். கேள்வி கேட்டவர்களை சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் என முத்திரை குத்தினர். இதையே தான் எம்.சி.பி.ஐ. ஆரம்பித்த பின்னரும் பெ.ம. செய்து வந்தார்.

சமீபத்திய ஆட்சிக் கவிழ்ப்புத் தோல்வியை அடுத்து மறுபடி பதவியேற்ற கோர்ப்பசேவ் கட்சியைக் கலைத்ததும் தான் சி.பி.எம். மற்றும் பெ.ம.வின் வாய்களைத் திறக்க-

படிப்பகம்

www.padippakam.com



வைக்க நிர்பந்தித்து விட்டது. 22 ஆண்டுகளாக மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சியினர் முதலாளித்துவ மீட்சியையும், நவீன ஜார்களின் ஆட்சியையும் பற்றி குறிப்பிட்டு வந்தபோது அடாவடியாக மறுத்து வந்தனர். இதோ இன்று சோவியத் யூனியனையும் கட்சியையும் கலைத்து விட்டு ரசிய காமன் வெல்த் எனப் பகிரங்கமாகவே முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக சீரழிந்துவிட்ட ரசியாவில் இதுகாறும் நடந்த மாற்றங்கள் பற்றியும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இதுகாறும் நடந்த மாற்றங்கள் பற்றியும் வாயைத் திறக்காமல்,பொய் சொல்லி அணிகளை ஏய்த்ததற்கு ஏதேனும் சுய விமர்சன மனோபாவம் இவர்களிடம் தொனிக்கிறதா தோழர்களே?

(ii) இந்திய தேசியப் புரட்சி பற்றிய நிலைபாடுகளில் சி.பி.எம்.மின் அதே திரிபுவாத நிலைப்பாடுகளையே பெ.ம.வும் பின்பற்றுவதை பார்க்கலாம்.

1947 அரசியல் மாற்றத்தை இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டதாகக் கூறுகிறார். ஏகாதிபத்தியங்கள் தமது அடிவருடிகளிடம் ஆட்சியை ஒப்படைத்துச் சென்றன. அதன் மூலம் தமது மூலதனத்திற்கும், கொள்ளைக்கும் உத்திரவாதம் பெற்றன. எங்கெல்லாம் இடது சாரிகள் தலைமையில் மக்கள் திரட்டப்பட்டு ஏகாதிபத்தியங்கள் எதிர்க்கப்பட்டனவோ அங்கெல்லாம் தனது காலனிய, அரைக் காலனிய சார்பு நாடுகளைப் பாதுகாக்க ஏகாதிபத்தியங்கள் இறுதி வரை யுத்தங்களை நடத்தியுள்ளன. (உ-ம். கொரியா, வியட்நாம்) சிலநாடுகளை வென்று தன் அடிவருடிகளிடம் மீண்டும் ஒப்படைத்துள்ளன (உம்:மலேசியா)எனவே இந்தியாவிற்கு ஏகாதிபத்தியம் சுதந்திரத்தை கொடுத்துச் சென்றது என்பது ஏகாதிபத்தியம் தனது புல்லுருவித்தனத்தை, அடக்கு முறையைக் கைவிட்டு விட்டது எனக் கூறுவதாகும். புலி சைவமாகி விட்டது என்பதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



மேலும், இந்திய ஆளும்வர்க்கத்தை பற்றி ''இந்தியாவில் தேசிய இனங்கள்'' என்ற தனது நூலில் பெ.மு ''பெரு முதலாளித்துவ அரசு'' என்பது நிலப்பிரபுத்துவக் கூட்டோடு, அந்நிய மூலதனத் தொடர்போடு, பெரு முதலாளித்துவத்தின் தலைமையிலுள்ள அரசு என்பதைக் குறிக்கிறது என்கிறார். ஆனால் பெரு முதலாளியின் தன்மை தேசியத் தன்மையா, தரகுத் தன்மையா என தெளிவாகவும் கறாராகவும் கூறுவதில்லை.

ஆனால் அன்றாட நிகழ்ச்சிகள் இந்திய அரசு, ஏகாதிபத்திய நலன்காக்கும் அரசு என்பதையும் அதற்கென மக்களின் நலனைப் பலியிட தயங்காது என்பதையும் நிரூபிக்கின்றன. ஆளும் வர்க்கங்கள் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் தன்மையுடையன என்பதையே காட்டுகின்றன. இந்தியாவிற்கு அரசியல் சுதந்திரம் கிடைத்துவிட்டதாகப் பிதற்றும் போலிக்கம்யூனிஸ்டுகளின் முகத்தில் அறைந்து கவனிக்க சொல்வது போலத்தான் நடப்பு செய்திகள் அப்பட்டமான நிலையை எடுத்து வைக்கின்றன,

நிதி அமைச்சர் மன்மோகன் சிங்கின் அலுவலகத்தில் ஐ. எம். எஃப்பின் ஏஜெண்டுகள் பலர் பணியாற்றுவதை இந்தியன் எக்ஸ்பிரஸ் 19-11-91 தேதியில் தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டு உள்ளது. இவ்விசயம் அரசியல் சுதந்திரம் பெயரளவிற்கானது என்பதையும் ஆளும்வர்க்கங்கள் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் தான், தேசிய முதலாளிகள் அல்ல என்பதையும் காட்டுகிறது,

ஒரு நாடும் அதன் அரசும் தமது நாட்டின் எல்லைகளை பாதுகாக்கவும், பொருளாதாரத் துறையில் தம் மீதான சுரண்டலை எதிர்க்கவும், பிற நாடுகளுடனான உறவில் சமத்துவம், சகோதரத்துவத்தை பின்பற்றுவதற்கு ஏகாதிபத்தியங்கள் விதிக்கும் தடைகளை மீறி எதிர்க்கவும் துணிவதையே அரசியல் சுதந்திரம் உள்ளதாக பாவிக்க

படிப்பகம்

www.padippakam.com



இயலும். ஆனால் பெ. ம. உள்ளிட்டு திரிபுவாத, போலி கம்யூனிஸ்டுகள் அனைத்திலும், ஐ. நா. தீர்மானங்களில் இந்தியா பேசிய பேச்சுக்களை, பொதுவாக ஏகாதிபத்திய எதிர்ப்பு, வல்லரசு கொள்கை எதிர்ப்பு என பெயரிட்டுச் சொல்லாமல் அனாமதேயமான வெற்று சவடால்களை தேசிய சுதந்திரத்திற்கான எடுத்துக் காட்டுகளாக கதைக் கின்றனர். பாலஸ்தீனத்து, அரபு மக்களின் சுயாதிபத்தியத் திற்காக பேசிக் கொண்டே இஸ்ரேல் பிரதம மந்திரியை இந்தியாவுக்கு இரகசியமாக வரவழைத்து பேசும் இந்திய அரசுத் தலைவர்களா தேசிய முதலாளிகளின் பிரதிநிதிகள்? பல்கி பெருகி வரும் ஐ. எம். எஃப் கடனும் உலக வங்கி கடனும் இந்தியாவின் தரகு முதலாளித்துவ வர்க்கங்களை இனங்காட்டவில்லையா?

மக்களைப் பட்டினி போட்டு உணவுப் பொருளை ஏற்றுமதி செய்வது, உலக வங்கியின் விருப்பத்திற்கு இணங்க பொருளாதாரத்தைத் திட்டமிடுவது, ரூபாய் மதிப்பு குறைப்பு, விவசாயத்திற்கும் மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருள்களுக்கும் தரும் மானியத்தைக் குறைத்தல், தனியார் மயமாக்குதல், இந்திய மூலதனம், தொழில் நுட்பம், உற்பத்திக்கு உத்திரவாதம் தராமல் அந்நிய மூலதனம், தொழில் நுட்பத்தைச் சார்ந்து பொரு ளாதாரத்தைத் திட்டமிடுவது ஆகியன ஒரு சில உதாரணங் களாகும்.

(iii) இந்தியப் புரட்சிப் பாதையை வரையறுப்பதில் சி. பி. எம். பின்பற்றும் அதே திரிபுவாத அணுகு முறையைத் தான் பெ. ம. வும். கையாண்டுள்ளார். தன்னுரிமைக்கு முன்னுரிமை தருவது, தேசிய இனஅடிப்படையில் கட்சியை அமைத்தல், சாதியவாத அமைப்புகளுடன் கூட்டு என்பவற்றைத் தவிர பிறவற்றில் வேறுபாடு எதுவுமில்லை. தன்னுரிமை அடைவதையே மக்கள்-ஜனநாயகப் புரட்சியின் ஒரு கட்டமாக வர்ணிக்கும் பெ. ம தன்னுரிமைக்காக முன்

படிப்பகம்

www.padippakam.com



வைப்பது ஆயுதப் போராட்டப் பாதையா, சட்டமன்றப் பாதையா எனத் தெளிவாக முன் வைக்கவில்லை. ஆயுதப் போராட்டப் பாதை என்றால், ரசியா வில் 1917 ல் பின்பற்றிய ஆயுதப் பேரெழுச்சிப் பாதையா, சீனாவில் பின்பற்றிய நீண்டகால மக்கள் யுத்தப் பாதையா, இல்லை வேறொன்றா, எதை சாரம்சமாக, அடிப்படை யாக பின்பற்ற வேண்டும் என்று தெளிவுபடுத்தவில்லை.

1951 கொள்கை அறிக்கையில் பகுதிப் புரட்சியைப் பற்றி குறிப்பிட்டு, சட்டபூர்வப்பாதையையும் குறிப்பிடு வதைப் போலவே, 1964 சி. பி. எம் திட்டத்தில் குறிப்பிடு வதைப் போல எப்படி வேண்டுமானாலும் புரிந்துகொள்ள, விளக்க இயலுவது போன்று தெரிந்தெடுத்த சந்தர்ப்ப வாத வாசகங்களையேக் குறிப்பிடுகிறார்கள். [பார்க்க: எம். சி. பி. ஐ கட்சிதிட்டம் [வரைவு] பக். 25. பாரா 1]. நடைமுறையில் சாதாரண ஓட்டுக்கட்சியாகவே நடந்து கொள்கிறார்கள். தெளிவான நிலைப்பாட்டை முன் வைப்பதும், கறாராக அதை பின்பற்றுவதும் தான் மார்க்சிய - லெனினிய அணுகு முறையாகும்.

1989 ஜனவரி தமிழக் சட்டமன்றத் தேர்தலில் எம். சி. பி. ஐ இடதுசாரி முன்னணியும், இடதுசாரி ஜன நாயக முன்னணியும் அமைக்க இயலாததால் இரு தொகுதி களில் தனித்துப் போட்டியிட்டார். அதே ஆண்டு நவம்பர் பாராளுமன்றத் தேர்தலில், அவர்களது அகில இந்தியத் தலைமை ஜனதாதளம், தி.மு.க., தெலுங்கு தேசம் உள்ளிட்ட தேசிய முன்னணியை ஆதரித்த போது தமிழ கத்தில் அதனைப் பின்பற்றவில்லை. '91 சட்டமன்றத் தேர்தலில் த. தே, பொ, கட்சியினர் எப்படி சீரழிந்த கொள்கைகளைப் பின்பற்றினர் என்று ஏற்கனவே பார்த் தோம். ராஜீவின் கொலைக்கு அனுதாபம் தேவையில்லை என்று கூறாமல் மௌனியானார்கள். பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ஆட்சியில் ஈழ அகதிகளை வெளியேற்றக் கூடாது என்றாலோ, ஈழப் போராளிகள் அரசியல் தஞ்சம்

படிப்பகம்

www.padippakam.com



புக உரிமை உண்டு என்றாலோ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் குற்றஞ் சாட்டப்படுவதால் கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள் ஏவப்படுவதால் அதுபற்றி வாய் திறக்கவே இல்லை. இவை எல்லாம் சாதாரண ஓட்டுக்கட்சியினரே சட்டபூர்வ நிலைக்காக கொள்கையைச் சொல்லாமல் முடங்குவோர்களே என நிரூபித்துள்ளனர். இதுவும் சி.பி.எம் மின் சந்தர்ப்பவாதப் பாரம்பரியத்தில் ஊறி வந்ததைத் தான் காட்டுகிறது.

மார்க்சிய-லெனினியவாதிகள் இந்தியப் புரட்சிப் பாதை நீண்டகால மக்கள் யுத்தப்பாதை எனத் தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றனர். சட்டபூர்வ முறைகளைப் பின்பற்றினாலும் புரட்சியின் பிரதான போராட்ட வடிவம் ஆயுதந்தாங்கிய கொரில்லா போராட்ட வடிவமே; சட்ட மன்ற, நாடாளுமன்ற மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் தேர்தலைப் புறக்கணிப்பது-அம்பலப்படுத்துவது அவசிய மான கடமையாகும்; மக்கள் யுத்தப் பாதையுடன் அறவே பொருந்தாததால், யுத்த தந்திர ரீதியில் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும்; விவசாயப் புரட்சியே புதிய ஜனநாயகப் புரட்சியின் சாராம் சமாக இருக்கும் என்ற நிலைப்பாடுகளை முன் வைக்கின் றனர்.

இவ்வாறு பொதுவுடைமைவாதி என்ற முறையில் மார்க்சிய-லெனினிய அணுகு முறையை பின்பற்றாமல் திரிபுவாத சி.பி.எம்-மின் அடிப்படையை தொடர்ந்து பற்றி நிற்கிறார் பெ. ம. 1976க்கு முந்தைய சி.பி.எம் சரி என்று வாதிட்ட பெ.ம., த.தே, பொ. க. அமைத்த போதும் அடிப்படை அரசியல் கோட்பாடுகள் என்ற முறையில் சரியான மா. லெ. நிலைப்பாடுகளுக்கு வரவில்லை. ஏற்கனவே ஊறித் திளைத்த சி.பி.எம்-மின் சந்தர்ப்பவாத திரிபுவாத நிலைப்பாடுகளை பற்றி நின்றாலும் தன்னுரி

படிப்பகம்

www.padippakam.com



மைக்கு முன்னுரிமை, சாதியவாத அமைப்புகளுடன் கூட்டு, தேசிய இனங்கள் அடிப்படையில் கட்சி அமைத்தல் என்ற மூன்று விசயங்களில் மட்டுமே தற்சமயம் பெ. ம வேறுபடுகிறார். ஆனாலும் கூட இந்த வேறுபாடுகள் அவரை குணாம்சரீதியில் திரிபுவாத நிலைபாடுகளுக்கும் அப்பாற்பட்டு அதையும்விட மோசமான நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன.

## *மார்க்சிய சொல் அலங்காரத்துடன் பிறந்திருக்கும் முதலாளித்துவ தேசியவாதம்!*

**நமது மூன்றாவது கேள்வி;**

தன்னுரிமைக்கு முன்னுரிமை, தேசிய இன அடிப்படையில் பொதுவடைமைக் கட்சி என்பவை பாட்டாளி வர்க்கத்தின் நிலைப்பாடா? தமிழ் தேச தன்னுரிமையை ஆதரிக்கும் பிற அமைப்புகளுடன் த.தே பொ.க.விற்கு என்ன வேறுபாடு?

பாட்டாளி வர்க்கம் சர்வதேசியத்தை உயர்த்திப் பிடிக்கிறது. மக்கள் ஜனநாயகப் புரட்சியில்தான் சுய நிர்ணய உரிமை சாத்தியம் எனக் கருதுகிறது. குறிப்பாக நமது நாட்டினை மனையாக அழுத்தும் ஏகாதிபத்தியம், நிலப் பிரபுத்துவத்தை பாதுகாக்கும் மைய அரசை முறியடிக்காமல் சுய நிர்ணய உரிமை பெற இயலாது. எனவே தன்னுரிமைக்கு முன்னுரிமை, தேசிய இன அடிப்படையில் பொதுவுடமைக் கட்சி என்பவை பாட்டாளி வர்க்கத்தின் நிலைப்பாடுகள் இல்லை.

இதனால்தான் தமிழ் தேசியம் பேசும் நெடுமாறனுக்கும் த. தே. பொ. க. க்கும் நடைமுறையில் வித்தியாசம் இல்லை என்கிறோம் த. தே. பொ. கவும் ஒரு முதலாளித்துவ தேசியவாதக் கட்சியே என்கிறோம்.

த —2

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவில் உள்ள மைய அரசு, தரகு அதிகார வர்க்க முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் அரசாகும். அது பல்வேறு தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்கி வருகிறது தேசிய இனங்களை அடக்குவதில் பிற தேசிய இனங்களை பயன்படுத்தி ஏவி விடவும் செய்கிறது. தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தூண்டி விடவும் செய்கிறது. இந்நிலையில் பல்வேறு தேசிய இனங்களிலுள்ள பாட்டாளி வர்க்கம், சுயேச்சையான அரசியல் கட்சியை நிறுவி, புதிய ஜனநாயகப் புரட்சியை நடத்தி, தேசிய இனங்களுக்கு சமத்துவமும், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய் உரிமையையும் அளிப்பது என்ற தீர்வை மேற்கொள்வதா? அல்லது பல்வேறு தேசிய இனங்களில் உள்ள பாட்டாளி வர்க்கம், தனித்தனி தேசிய இனங்களைத் திரட்டுவது. தன்னுரிமைக்கு முன்னுரிமை தந்து போராடுவது, இவ்வாறு மைய அரசின் பிடியிலிருந்து விடுதலை பெறுவது அதாவது, புதிய ஜனநாயகப் புரட்சியை தமது தேசிய இனத்திற்காக முன்னெடுத்து செல்வது என்ற திட்டத்தை மேற்கொள்வதா? இவ்விரண்டு தீர்வுகளில் எது பாட்டாளி வர்க்கத் தீர்வு?

சந்தேகமின்றி முதலில் சொன்னதுதான். பிந்தையது முதலாளிகளின் நிலைபாடாகும். ஒரு மைய அரசின் கீழ் பல்வேறு தேசிய இனங்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ள எந்த நாட்டிலும் அனைத்து தேசிய இனபாட்டாளி வர்க்கத்தின் முன்னணி படையாக ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியே இருக்க முடியும். ஏனெனில் பாட்டாளி வர்க்கம் சர்வ தேசியத் தன்மையுடையது, தேசிய இனங்களுக்கு அப்பாற்பட்டது, அதே சமயம் அதற்கு எதிரானதல்ல ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும்தான் லெனினிச காலகட்டம் என அழைக்கப்பட்டது! எனவே பெ, ம. முன் வைக்கும். தன்னுரிமைக்கு முன்னுரிமை, முதலாளி வர்க்கத்தின் தேசியவாதமேயொழிய பாட்டாளி வர்க்கத்தின் முழக்கமேயல்ல.

படிப்பகம்

www.padippakam.com



தனது தேசிய இனத்திற்கு மட்டும் தன்னுரிமை கோருவது, முதலாளித்துவ தேசிய வாதமாகும். அனைத்து தேசிய இனங்களுக்கும் தன்னுரிமை கோருவதே. பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும். இதன் மூலம் பிரிந்து போவதிலுள்ள அனுகூலங்களை அடைய முதலாளிகள் வைக்கும் பிரிவினை வாதத்திலிருந்து நமது தன்னுரிமைக்கான கோரிக்கையை வேறுபடுத்துவதும், தேசிய தப்பெண்ணங்கள் தோன்றாமலும் அது வர்க்கப் போராட்டத்திற்கு தடையாக மாறாமல் பார்த்துக் கொள்வதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமையென லெனின் வலியுறுத்துகிறார்.

தன்னுரிமைக்கான பிரச்சாரத்தையும் கிளர்ச்சியையும் பாட்டாளி வர்க்கம் முன் வைக்கும் போதே பிற தேசிய இனங்களுடன் ஐக்கியத்திற்கான முழக்கத்தையும் முன் வைத்து பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டிய நமது கடமையை மறக்க இயலாது.

ஏனெனில் யார் தலைமையில் ஆட்சி இருந்தால் என்ன தனிநாடு கிடைத்தால் போதும் என்ற கண்ணோட்டத்தில் தனிநாடு கோரும் முதலாளித்துவ தேசிய வாதத்தைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பதோ, அதன் மூலம் சொந்த தேசிய இன முதலாளியின் சர்வாதிகாரத்தை ஏற்றுக் கொள்வதோ, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்திற்கு உதவாது. எனவேதான் ஒரு ஜனநாயகப் புரட்சியில் அனைத்து தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்திப் போராடுவது பாட்டாளி வர்க்க சர்வ தேசிய வாதத்திற்கு உட்பட்ட தேசியவாதமாக இருக்கும் என்று கூறுகிறோம்.

தமிழ் தேசியத் தன்னுரிமை வேண்டும் என தமிழர் தேசிய இயக்கம், சாதிய வாத பாட்டாளி மக்கள் கட்சி, இன்னும் தனித்தமிழ்வாதிகள், 'மார்க்சிய'— பெரியாரிய

படிப்பகம்

www.padippakam.com



வாதிகள் போன்ற பலரும் கோருகின்றனர். இவர்களில் சிலர் பொதுவுடைமை என்ற பெயரில்லாமல் சொல்கின்றனர். பலர் மார்க்சிசம். சோசலிசம் என்ற கொள்கைகளை பின்பற்றுவதாக கூறிக் கொள்கின்றனர். இவர்களுக்கும் தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சிக்கும் என்ன கொள்கை வேறுபாடு? நடைமுறையில் என்ன வேறுபாடு?

தமிழர் தேசிய இயக்கத்தை, தன்னுரிமை என்னும் கப்பலில் செல்லும் சகபயணி என வருணித்துக் கொள்ளும் பெ. ம. ஏன் அவர்களுடன் ஒரே கட்சியாக இல்லை? தன்னுரிமை கோரும் இவர்கள் அனைவரும் ஏன் தனித்தனி கட்சியாக இருக்கிறார்கள்? முதலாளித்துவ தேசிய இனவாதத்திற்கும், தமிழ் தேச பொதுவுடைமை கட்சிக்கும் கொள்கையிலும், நடைமுறையிலும் என்ன வேறுபாடு?

மக்களை வர்க்க ரீதியாக திரட்டுகிறார்களா? விவசாயிகளை திரட்டுகிறார்களா! ஆயுதப் போராட்டம், அரசியல் போராட்டம் என்ற கொள்கையும் நடைமுறையும் உண்டா? அப்படி எதுவும் கிடையாது.

கடினமான, விடாப்பிடியான மார்க்சிய-லெனினிய அணுகு முறையில், நிலைப்பாடுகளில் நம்பிக்கையிழந்து, எளிதில் பிரபலமடைந்து விடவேண்டும், மக்களைத் திரட்டி விடவேண்டும் என்ற முதலாளித்துவ முறையை — ஆளும் வர்க்க அணுகு முறையை பாட்டாளி வர்க்க சொற்றொடர்களுடன் முதலாளித்துவ வர்க்க பின்னணியுள்ளவர்கள் கையாளுகிறார்கள். ஆகவே பாட்டாளி வர்க்கம் இது போன்ற பல திரிபு வாதத் தலைமைகளை அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும். இத்தகையவர்கள் தமது சொந்த சீரழிவால் அம்பலமாகி ஒதுங்கும் வரை கவனிக்காது இருப்பது பாட்டாளி வர்க்க இயக்கத்தை பலவீனப் படுத்தும்; அதன் வெற்றியை தாமதப் படுத்தும்.

படிப்பகம்

www.padippakam.com



இதே சந்தர்ப்ப வாத அணுகுமுறையைதான் இட ஒதுக்கீடு விவகாரத்திலும் பெ. மணியரசன் பிரயோகிக் கிறார்.

## வர்க்கப் போராட்டத்தை மழுங்கடிக்கும் சீர்திருத்தத்திற்கும் ஆதரவு

**நமது நான்காவது கேள்வி :**

மண்டல் குழு பரிந்துரையை சீர்திருத்தம் என்ற அளவில் ஆதரிக்க வேண்டும் என்கிறார் பெ. மணியரசன் இது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் பணிகளுக்கு உதவுமா? பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு என்ன வரை யறை?

மண்டல் குழு அறிக்கை பற்றிய நமது நிலைப்பாடு பற்றி விமரிசித்த பகுதியில், ''ஒரு புரட்சியின் மூலம் தூக்கி யெறியப்படும்வரை தற்போதுள்ள அதிகார வர்க்க அமைப்பு நீடிக்கும். அந்த அதிகார வர்க்க அமைப்பில் புரட்சிக்கு முன்னர் சில சீர்திருத்தங்களைக் கோருவதும், நடைமுறைப்படுத்தப்படும் சீர்திருத்தங்களை - சீர்திருத்தம் என்ற அளவில் ஆதரிப்பதும் புரட்சிகர சக்திகளின் கடமை யாகும். மண்டல் குழு பரிந்துரையை ஒரு சீர்திருத்தம் என்ற அளவில் ஆதரிக்க வேண்டும்'' என்கிறார் பெ. மணி யரசன்.

பெ.ம. கூறுவது போல சீர்த்திருத்தங்களை புரட்சிக்கு முன்பே கூட ஏற்கலாம் என்பது சரியானதே. என்றாலும், எந்த சீர்திருத்தங்களை புரட்சிகர நோக்கத்திற்கு பயன் படுத்த முடியும், எந்த சீர்திருத்தங்களைப் பெற்றுத்தந்து உடனடி நிவாரணம் அளித்து. அதற்கான போராட்டத்தில் புரட்சிகர உற்சாகமும், அமைப்பு உணர்வும் கொள்ளச் செய்து மேற்கொண்டு புரட்சிகர போராட்ட அமைப்பு

படிப்பகம்

www.padippakam.com



களைக் கட்ட முடியும் என்ற கண்ணோட்டத்தில் தான் இதை பரிசீலிக்க வேண்டும்.

இட ஒதுக்கீடு சலுகைகள் சமூக நீதி என்ற முறையில் கொண்டு வரப்படவில்லை. அதன் பிரதான நோக்கம் இந்த சுரண்டல் சமூக அமைப்பின் மீதும் அதனைப் பாது காக்கும் அரசமைப்பின் மீதும் நம்பிக்கைக் கொள்ளச் செய்வதே நாமும் நாட்டை நடத்திச் செல்வதில் பங்களிப்பு பெறுகிறோம் என்று நம்பச் செய்வதேயாகும். இதோ பெ.ம.மேற் கோளிடும் மண்டல் குழுவே அளித்திடும் வாக்கு மூலம்.

''பிற்படுத்தப்பட்ட சாதியில் ஒருவர் மாவட்ட ஆட்சித் தலைவராகவோ அல்லது காவல் துறை கண்காணிப்பாள ராகவோ பதவியில் இருந்தால் அதனால் கிடைக்கும் பொருளாதாரப் பலன்கள் அந்த குறிப்பிட்ட நபரின் குடும் பத்திற்கு மட்டும் போய் சேரும். அதனால் உண்டாகும் உளவியல் பூர்வ உற்சாகம் பிரம்மாண்டமானது. சமூக ரீதியில் அவர் உயர்ந்து விட்டதாக உணர்கிறார். அவரு டைய சாதிக்கு அதனால் பெரிய பயன் உண்டாகவில்லை என்றாலும் கூட தன்னுடைய சொந்தக்காரர் அதிகார வாயிலில் வீற்றிருக்கிறார் என்ற எண்ணம் அச்சாதியின் நம்பிக்கையைப் பெருக்குகிறது.''

''பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக எந்த சேம நலத் திட்டத்தை அமுல் படுத்தினாலும் அதன் பலன்களை அவ்வகுப்பிலுள்ள முன்னேறிய பகுதியினர் மடக்கிக் கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. சீர்திருத்த முறையில் அமைந்த எல்லாப் பரிகாரங்களும் படிப்படியாகத்தான் பலன் கொடுக்கும். சமூகச் சீர்திருத் தத்தில் முழுப்பாய்ச்சலுக்கு இடமில்லை. இட ஒதுக் கீட்டின் தலையாய சிறப்பம்சம் பிற்படுத்தப்பட்டவர்களி டையே சமத்துவத்தைக் கொண்டு வருவது அல்ல. பிற் படுத்தப்பட்டுள்ள மக்களுக்கு வெளியே உள்ள இந்திய

படிப்பகம்

www.padippakam.com



சமூகமானது எல்லா வகை சமத்துவமின்மைகளாலும் முற்றுகையிடப் பட்டிருக்கிறது. ஆனால் உறுதியாக இட ஒதுக்கீடு வேலைகளில் நிலவும் மேல் சாதியினரின் பிடியை சிதைத்து, நாட்டை நடத்திச் செல்வதில் நாமும் பங்கு கொள்கிறோம் என்ற உணர்வை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்கும்''

(மண்டல் குழு பரிந்துரை பக்-57)

மண்டல் குழு இது மட்டும் கூறவில்லை. இட ஒதுக்கீடு சலுகைகள் வர்க்கப் போராட்டத்தை மழுங்கடிக்கும் என்ற பொருளிலும் கூறியுள்ளது.

''வரலாற்று ரீதியில் நசுக்கப்பட்ட மக்களின் நியாயமான ''கோரிக்கைகளையும், தாகங்களையும் ஆளும் உயர்சாதியின் முறையாக தீர்ப்பதில் தான் சமுதாய சிக்கல்களால், மோதல்கள்—பதட்டங்களால் (Social-Tensions) சமுதாயம் சீர்குலைந்துபோவதும் அல்லது நாடு தமக்குள்ளே (இட ஒதுக்கீடு போன்ற) சமாதான நடவடிக்கைகள் மூலம் சமுதாய சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதும் அடங்கியிருக்கிறது''

(மண்டல் குழு அறிக்கை-பக்-20)

எனவே மண்டல் குழுவின் வர்க்க நோக்கத்தை இதற்கு மேல் தெளிவு படுத்த வேண்டிய அவசியம் இராது என்றே நம்புகிறோம்.

பாட்டாளி வர்க்கக் கட்சி இந்த இட ஒதுக்கீடு சலுகைகளை எப்படிப் பார்க்க வேண்டும்? 1975லே அவசர நிலைப் பிரகடனம் செய்து பாசிச சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்ட இந்திராகாந்தி தனக்கு ஒரு சமூக அடிப்படையைப் பெற 20 அம்ச திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனை இ.க.க. ஆதரித்தது. நடைமுறையில் இ. காங்கிரசிற்கு வாலாக செயல்பட்டது. (பின்னர் தேர்தல்

படிப்பகம்

www.padippakam.com



தோல்வி ஏற்பட்டு, மக்களிடமிருந்து தனிமைப் பட்டதும் இ.க.க. சுயவிமர்சனம் செய்து கொண்டது.) 1990லே ஆட்டம் கண்ட தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள பத்து வருடமாக கிடப்பில் போடப்பட்டிருந்த மண்டல் குழு பரிந்துரையை அமுலாக்குவதாக வி.பி. சிங் அறிவித்தார். திரிபுவாதப் பாரம்பரியத்திற்கு ஏற்பவே தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சியும் பெ.ம.வும் அதற்கு ஆதரவான நிலைப்பாடு எடுக்கின்றனர்.

மண்டல் குழு பரிந்துரையைக் கொண்டு வருவதாகச் சொல்லுகின்ற அதேவேளை, 1986லிருந்து அரசு மற்றும் பொதுத் துறைக்கு புதிய ஆள் சேர்க்கை மிகவும் குறைக்கப் பட்டுள்ளது. பல துறைகளில் அறவே இல்லை. இப்போது பொதுத்துறையின் பல பகுதிகள் தனியார் துறைக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. சாதி ரீதியில் பிற்படுத்தப் பட்ட மக்களாகப் பிறந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு சலுகை பற்றிக் கூறும் மண்டல் கமிஷன், பல கோடி கூலி, ஏழை விவசாயிகளுக்கு என்ன சொல்கிறது? ஏதுமில்லை. இவர்களுக்குத்தான் புரட்சி உடனடி அவசியமாக உள்ளது.

எவை பிற்படுத்தப்பட்ட சாதிகள்? இதில் நீதிக் கட்சியின் வழி வந்த திராவிட இயக்கங்களின் நிலைப் பாட்டையே பெ. மணியரசனும் கொண்டுள்ளார். உண்மையில் வருணாசிரம அடிப்படையில் பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என மக்கள் வகைப்படுத்தப் பட்டிருந்தனர். இவர்களுடன் கூட வைக்கப்படாமல், தனிப் பிரிவாக, கோவில் நிலத்தில் பாத்தியதை, ஊர் நிர்வாகத்தில் பங்கு என எந்த உரிமையும் மறுக்கப்பட்டு பஞ்சமர்கள், சண்டாளர்கள் என இரு பிரிவினர் இருந் தனர். உண்மையில் இவர்கள் தான் இன்று தாழ்த்தப் பட்ட பல சாதிப் பிரிவுகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

நிலத்தில் உழைக்கும் விவசாய மக்களும் சேவைத் துறையினரும்தான் சூத்திரர்களாக வைக்கப்பட்டிருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



பஞ்சமர்கள், சண்டாளர்களை விட இவர்கள் சற்று கூடுதலாக உரிமை பெற்று இருந்தனர். உண்மையில் காலங்காலமாக சாதிய நுகத்தடியினால் அழுத்தப்பட்டவர்கள். சூத்திரர்கள், பஞ்சமர்கள் சண்டாளர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட பிரிவினர்கள் தான். இட ஒதுக்கீடு சலுகை அளிக்கப்பட்டால் இவர்களுக்கு கொடுப்பது தான் சரியாக இருக்கும்.

ஆனால் திராவிட இயக்கங்களோ சத்திரிய, வைசிய, வருணத்தோரையும் சூத்திரர் என்ற பிரிவில் சேர்க்கின்றனர். உதாரணமாக வன்னியர்கள், நாடார்கள், மறவர்-தேவர்கள் தங்களை சத்திரியர்கள் என சமூக உரிமை, தகுதி பாராட்டிக் கொள்கின்றனர். சேர, சோழ, பல்லவ, பாண்டிய வம்ச வழி வந்தவர்கள் எனக் கூறிக் கொண்டு ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஆனால் சூத்திர வருணத்திற்கான சலுகைகளைக் கோருகின்றனர். பெ. மணியரசன் எந்த விமர்சனமும் இல்லாமல் திராவிட இயக்கங்களின் இந்த நிலைப்பாட்டை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்.

எவை பிற்படுத்தப்பட்ட சாதி என்ற விசயத்திற்குள் சென்றாலோ. இவர்களுடன் இந்த விசயத்தில் முரண்பட்டாலோ, இவர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்வதில்லை. அதைவிட கேள்வி கேட்பவர்களை, அவர்களிடமிருந்து வேறுபடுபவர்களை, பார்ப்பனர் என்றே முத்திரை குத்துகின்றனர். இவ்வாறுதான் ''பார்ப்பனீய மேலாதிக்கம் இந்திய சமூகத்தில் இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளும் இப்பத்திரிக்கை (புதிய ஜனநாயகம்) இந்த ஒடுக்குமுறைக்கு எதிராகவுள்ள மண்டல்குழு பரிந்துரையை ஆதரிக்க மறுக்கிறது. இதன் பொருள் நடைமுறையில் பார்ப்பனீய மேலாதிக்கத்தை ஆதரிப்பதுதான்'' என்கிறார் பெ. மணியரசன். உண்மையில் நாங்கள் பார்ப்பனரோடு பிற மேல் சாதிகளின் ஆதிக்கத்தையும் எதிர்க்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனரல்லாதோர் என்கிற பெயரில் பெ.ம. போன்றவர்கள் மேல்சாதி மேட்டுக்குடியை ஆதரிக்கின்றனர்.

*மார்க்சிய - லெனினிய இயக்கத்தினரை அணுகுவதில் பெ.ம. கடைபிடிப்பது சி.பி எம்-மின் வக்கிரத் தன்மையையே!*

**நமது ஐந்தாவது கேள்வி:**

மா-லெ இயக்கத்தை ஒரு பொதுவுடமைவாதி என்ற முறையில் இதுவரை அணுகியுள்ளாரா? ஒரு இயக்கத்தில் எதனால் பல்வேறு குழுக்கள் —கோஷ்டிகள் நிலவுகின்றன? குட்டி முதலாளித்துவ கட்சிகளுக்கும் பாட்டாளி வர்க்க கட்சியில் நிலவும் குழுக்களுக்கும் என்ன வேறுபாடு?

பெ.மணியரசனைப் பொருத்தவரை, மா-லெ இயக்கங்களின்பால் சி.பி.எம். கட்சி தலைமைகளின் தனிச்சிறப்பான வக்கிரத் தன்மையை வெளிக்காட்டுபவராகவே இருந்துள்ளார்; இன்னமும் இருக்கிறார். 1970- களில் புரட்சிகர மார்க்சிய — லெனினிய கட்சியை சேர்ந்த தோழர்கள் சந்திக்கும்போது சி.பி.எம் திரிபுவாதத்தை உயர்த்திப் பிடித்தார். இ.பொ.க. (மா-லெ) தோழர்களை (நக்சல்பாரி தோழர்களை) சி.ஐ.ஏ. ஏஜண்டுகள், அமெரிக்கக் கைக்கூலிகள் என அவதூறு பேசி வந்தார். நக்சல்பாரி கோஷ்டிகள் என்றுதான் குறிப்பிட்டு வந்தார். விமர்சனம் செய்பவர்களின் அரசியலை தமது அரசியலால் சந்திக்கும் ஆளுமையற்று, முத்திரை குத்தி தப்பிக்கப் பார்க்கும் பேடித்தனம் சி.பி.எம்-மின் பாரம்பரியமாகும். மா-லெ இயக்கத் தோழர்கள் மீது பெ.ம. மேற்கொண்ட இதே அணுகுமுறையை, இவருக்கே பிரயோகித்தது சி.பி.எம். இவரை சி.ஐ.ஏ. ஏஜண்ட் என்றது. ஆனால் இப்போதோ, அந்நிய நாட்டு உதவிகள் பெறும், தன்னார்வக்

படிப்பகம்

www.padippakam.com



குழுக்கள் பங்கேற்கும் இந்திய மக்கள் முன்னணியுடன் கூடிக்குலாவுகிறார், பெ.மணியரசன்.

ஒவ்வொருவரும் கையளவேயான சிறு கும்பலை வைத்துக் கொண்டு, அடிப்படை அரசியல் வேறுபாடின்றி, சாலை இளந்திரையன், பெருஞ்சித்திரனார், நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சி போன்றவர்கள் ஒரு மாநிலத்தில் 100 குழுக்களாக நிலவுவது பெ.ம. அவர்களுக்கு பிளவாகத் தெரியவில்லை; கோஷ்டிகளாகப் படுவதில்லை.

ஆனால் இ.பொ.க. (மா-லெ) கட்சி நாடு முழுவதும் ஒரே திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாடு முழுவதும் என எடுத்துக் கொண்டால் யுத்த தந்திரம் — போர்த் தந்திரம், அமைப்புக் கோட்பாடு ஆகியவற்றில் வேறுபாடுகள் காரணமாக பிளவுண்டு உள்ளது.

1917 க்கு முந்திய ரசிய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் இதே அரசியல் — அமைப்பு காரணங்களால் பல குழுக்கள் இருந்தன என அதன் வரலாற்றில் பார்க்கிறோம். இத்தகைய நியாயமான காரணத்திற்காக உள்ள குழுக்களை கோஷ்டிகள், கும்பல்கள், எண்ணிறைந்த பிரிவுகள் என குறிப்பிடுகிறார், பெ. மணியரசன்.

## பெ.ம. பின்பற்றும் அமைப்பு முறையில் மேலோங்கியிருப்பது முதலாளித்துவ தனிநபர் வாதமே!

**அடுத்த நமது இறுதிக் கேள்வி;**

பெ. மணியரசன் மா-லெ சித்தாந்தத்தை, அரசியலை கடைப்பிடிக்கவில்லை என்பது மட்டுமின்றி நேர்மையான முறையில் மார்க்சிய — லெனினிய அமைப்பு முறையை யாவது எம்.சி.பி.ஐ. யில் கருத்துவேறுபாடு கொண்டபோது கடைப்பிடித்தாரா? இப்போதும் கடைப்பிடிக்கிறாரா?

படிப்பகம்

www.padippakam.com



இல்லை. அமைப்பு முறைகளை தனக்கு பிரயோகித்துக் கொள்வதில்லை என்பதுதான் உண்மையாகும்.

எம்.சி.பி.ஐ, தலைமைக் குழுவில் இருந்த் இவர் அதனுடன் கருத்து வேறுபாடு கொண்ட போதும், அதன் மைய முடிவுகளை அமுலாக்கும் பொறுப்பு உள்ளவர். இது தான் ஜனநாயக மத்தியத்துவம். ஈழத் தமிழர் பிரச்சினையிலும் நவம்பர்'89 நாடாளுமன்ற தேர்தலிலும் மைய முடிவை அமுலாக்கவில்லை. மே'89 இல் அரசியல் தலைமைக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டும் நவம்பரிலிருந்தே மாநிலக் கிளையை தனிக் கட்சியாக்குவது என்ற முடிவுடன் செயல்பட்டார். பிப்ரவரி'90 தன்னுரிமை மாநாடு மைய நிலைப்பாட்டிற்கு முரணானதாகும். இதே போல் ஜூன் 90 முதல் 'கண்ணோட்டம்' பத்திரிகையிலும் எம்.சி.பி.ஐ. பெயரை விட்டு விடுவதும் பின்னர் தன்னுரிமைக்கு முன்னுரிமை முழக்கத்தை முகப்பு முழக்கமாக சேர்ப்பதும் மேற்கொள்கிறார். பெ.ம. வுக்கும் எம்.சி.பி.ஐ. க்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் ஒரு கட்சி என்ற முறையில் தீர்வு காண முடியாத, அடிப்படையான தன்மையானவை. பிரதான முரண்பாடு, புரட்சியின் பொதுப்பாதை, போர்த் தந்திரத் திட்டம் ஆகியவற்றில் வேறுபட்ட முடிவுகளைக் கொண்டதாகும். ஜனநாயக மத்தியத்துவ ரீதியில் ஒரே கட்சிக்குள் செயல்பட்டு தீர்வு காண முடியாதவை. எனவே முறையான உடனடியான உட்கட்சி விவாதம் நடத்தி அதனை முடிவுக்குக் கொண்டு வருவதுதான் ஒரு பொதுவுடமைவாதியின் முதற் கடமையாக இருக்கும்.

ஆனால் பெ.ம. சதிகார முறையில் நேர்மையான உட்கட்சி விவாதத்திற்கு தயாராக இல்லாமல், தமது நிலைப்பாடுகளை கட்சியின் நிலைப்பாடுகளாக்கினார்.

படிப்பகம்

www.padippakam.com

எடுத்துக்காட்டாக, தமிழ் தேச பொதுவுடமைக் கட்சியாக அறிவிக்கக் கூட்டப்பட்ட சிறப்புப் பொதுக் குழுவை எடுத்துக் கொள்வோம். எம்.சி.பி.ஐ. யாக இருந்தபோது இக் குழு கூட்டம் கூட்டப்பட்டது; எதிர்காலத்தில் கட்சியை எவ்வாறு எடுத்துச் செல்வது என்று ஜனநாயக முறையில் விவாதித்துத் தீர்மானிப்பதற்காக இக் கூட்டம் கூட்டப்படுகிறது என்று சொல்லப்பட்டது; ஆனால் முன்கூட்டியே கட்சியின் பெயர், சின்னம், கொடி ஆகியவற்றை தானே தீர்மானித்து, அதை அறிவிக்கும் சுவரொட்டியையும் அச்சடித்து அக்கூட்டத்திற்கு எடுத்து வந்திருந்தார் பெ.ம.; இந்த எதேச்சதிகார, தன்னிச்சை போக்கிற்கு பலர் செயற்குழுவில் எதிர்ப்பு தெரிவித்தனர்; ஜனநாயக முறைப்படி முடிவு எடுப்பதாகச் சொல்லி ஏமாற்று நாடகமாடியதாக பெ.ம.—வை பலர் விமர்சித்தனர்.

ஜனநாயக மத்தியத்துவத்தை சரியாகக் கடைப்பிடிக்கும் ஒரு கட்சியின் தலைவரிடம் இவ்வாறான முக்கிய விசயங்களில் தன்னிச்சையான செயல்பாட்டையோ, போலித்தனமான ஜனநாயக நாடகத்தையோ காண இயலாது. மாறாக சி.பி.எம் மின் சர்வாதிகார பராம்பரியத்தை கைவிடாத பெ.ம.விடம் எதேச்சதிகாரத்தையே காண முடியும்.

சந்தேகம் கேட்போரை ஆங்காங்கே அவரவர்க்கு தகுந்தாற்போல விளக்கம் அளித்து ஏற்றுக்கொள்ள வைத்தார். மேலும் வேறுபாடு தெரிவித்தவர்களை கட்சிக்குள் ஓரங்கட்டினார்; வெளியேறச் செய்தார். அவர்களது குழுவைக் கூட்டுவது, முறையாக விவாதித்து தீர்வு காண்பது செய்யவில்லை. இன்றளவும் கட்சித் திட்டம், அமைப்பு விதிகள் ஆகியன எதுவும் முறையாக த.தே.பொ.க. விற்குள் நிறைவேற்றப்படவில்லை, பிரயோகிக்கப் படவும் இல்லை.

www.padippakam.com



எனவே அன்பார்ந்த த.தே.பொ.க. அணிகளே, தெளிவான நிலை தெரியாமல் தடுமாற்றம், குழப்பம், விரக்தி, சலிப்புக்கு உட்பட்டிருக்கும் தோழர்களே,

இங்கு எழுப்பியுள்ள கேள்விகள் உங்கள் சிந்தனையைத் தூண்டுவதாக இருக்கட்டும்!

இந்த கேள்விகளும் விமர்சனங்களும் தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சித் தலைமை பற்றியும், அதிலும் குறிப்பாக பெ. மணியரசன் பற்றியும் சரியான கணிப்புக்கு வர போதுமானவை என்றே கருதுகிறோம்.

## பெ.ம.வின் அரசியல் பயணம்

தனது அரசியல் வாழ்வின் மிகவும் தொடக்க காலத்தில் உலகத் தமிழ் இன முன்னேற்றக் கழகத்தில் இருந்தார். இதன் பின்னே விவசாய இயக்கத்தில் வெங்கடாசலம் அவர்களின் போராட்டங்களைக் கண்டு கவரப்பட்டு சி.பி.எம். மில் இணைந்தார்.

மார்க்சிய-லெனினியத்தை விஞ்ஞான முறையில் கற்காமல், சி.பி.எம்.மின் திரிபுவாத அடிப்படை நிலைப் பாடுகளை அப்படியே வரித்துக் கொண்டு, அதன் அப்பட்டமான திரி வாத வெளிப்பாடுகளுக்கு பதிலாக, முந்தைய மூடி மறைக்கப்பட்ட திரிபுவாத நிலைக்கு 'புனிதப்படுத்த' முயன்றார். இந்த முயற்சியில் தோல்வியுற்று சி.பி.எம். மிலிருந்து வெளியேறி ஒரு வீரிய ஒட்டுரக திரிபுவாதக் கட்சியைத் தொடங்கினார். பல்வேறு காரணங்களுக்காக சி.பி.எம்.மிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுடன் அகில இந்திய ரீதியில் இணைந்தார். ஆனாலும் கூட இதே நிலையில் இல்லை. அடுத்த கட்டமாக முதலாளித்துவ தேசியவாதத்தை தூக்கிப் பிடித்து இந்த முகாமிலிருந்தும்

படிப்பகம்

www.padippakam.com



வெளியேறி, 'தமிழ் தேசிய இனத்திற்காகவே தனிக்கட்சி' தொடங்கியுள்ளார். பொதுவுடமைக் கட்சி என்ற பெயரையும் இன்னமும் வைத்துக் கொண்டுள்ளார்.

ஒரு சுற்று ''பொதுவுடமைக் கட்சி''களில் பயணமான பிறகு மீண்டும் முதலாளித்துவ தேசியவாதத்திற்கு திரும்பியுள்ளார் என்பதுதான் உண்மை. இதுகாறுமான தனது அரசியல் பயணம் முழுவதும் மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டம், புரட்சிகர நடைமுறை என்பவற்றிலிருந்து உணர்வு பூர்வமாக விலகி, அவற்றை வக்கிரத் தன்மையுடன் சாடுவதும், அதன் மூலம் தான் ஆளும் வர்க்கங்களுக்கு நம்பகமானவர், ''சாதுவானவர்'', ''ஆபத்தில்லாத வகை'' என்று காட்டிக் கொள்வதில் மிகவும் விருப்ப பூர்வமாக இருப்பதும் குறிப்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. இவர் இதர எல்லா ஓட்டுக் கட்சிகளைப் போன்றே சாதியவாத, மதவாத அமைப்புகளுடன் கூடிக் குலாவுவதையும் எளிதான பிரபலத்திற்கு எத்தனிப்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் தேசிய இனத்திற்கு நியாயமான உரிமைகள் மறுக்கப்படுவதை உணர்ந்து அதன் அடிப்படையில் த.தே.பொ.க-வில் இணைந்துள்ள தோழர்களே!

கம்யூனிசத்தை ஏற்பதும், மார்க்சிய-லெனினிய கொள்கையின் அடிப்படையிலான புதிய ஜனநாயகப் புரட்சியே தேசிய இனப் பிரச்சினையையும் தீர்த்து வைக்கும் என்பதைப் புரிந்து கொள்வதும் அவசியமாகும். மார்க்சிய - லெனினியத்தை கற்க முனைய வேண்டும். பெ. மணியரசன் போன்றவர்கள் பின்பற்றும் சித்தாந்தம், நடைமுறை இரண்டும் பொதுவுடமைக் கொள்கைக்கு முற்றிலும் வேறுபாடனவை.

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சிய – லெனினியத் தத்துவத்தின் ஒப்பற்ற தன்மையில் இன்னமும் நம்பிக்கையுள்ள அனைவரும், புரட்சிகர நடைமுறைக்காக முன்னிற்கும் அனைவரும், போலிக் கம்யூனிஸ்டுகளின் அணி வரிசையிலோ, வெற்று சவாடல்கள் தனது உடனடி பிரபலம் தேடும் முகாம்களிலோ நீண்ட காலம் இருக்க இயலாது. ஊக்கமான சித்தாந்தப் போராட்டத்தை தொடருங்கள்! கடந்த கால அரசியல் - அமைப்புத் தவறுகளை சக தோழர்களுக்கு சுட்டிக் காட்டுங்கள். மா-லெ அமைப்பு முறையை தாமும் பின்பற்றி பிறருக்கும் எடுத்துச் சொல்லுங்கள். சந்தர்ப்பவாத தலைமைகளையும் கட்சிகளையும் நிராகரியுங்கள். புரட்சிகர கட்சியில் இணையுங்கள்.

புதிய ஜனநாயகப் புரட்சியை
முன்னெடுத்துச் செல்வோம்!

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்